## றொறன்ரோ சமூகவளத் தொடர்புகள் (சீஆர்சீரீ- CRCT)

மிகப்பாரதூரமான உளநலப் பிரச்சினைகள் உள்ள 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் சமூகத்தில் மரியாதையுடனும் மனநிறைவுடனும் வாழ்வதற்கு சீஆர்சீரீ பல வழிகளிலும் ஆதரவு வழங்குகிறது.

மதிப்பு, தெரிவுச் சுதந்திரம், நம்பிக்கை, உறுதி கொள்தல், பாவனையாளர்களால் வழிகாட்டல், இணைந்து செயற்படல், வாய்ப்புக்களை வழங்குதல், நீதி, நியாயம், சமத்துவம், ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு நாம் செயற்படுகிறோம். உலகின் பல்வேறுபட்ட சமூக-பண்பாட்டு அநுபவங்களை உள்வாங்கி பெறுமதி வாய்ந்ததாகக் கொள்வதில் சீஆர்சீரீ மிகுந்த அக்கறை காட்டுகிறது. எங்கள் சேவையானது இனத்துவேசம், அடக்குமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகளைக் கொண்டது,

## எங்கள் சேவைத் திட்டங்கள்

- சமூக ஆதரவுச் சேவைகள் (கிழக்கு-மேற்கு குழுக்கள்), குடும்பச் செயல் திட்டம் சோமாலி, தமிழ்மொழிச் சேவைப் பணியாளர்கள்
- உடல்-உள நல விருத்திச் செயல் திட்டம்
- விடுதி-வதிவிட அரவணைப்புச் சேவைத் திட்டம் (HOP) (பெண்களோடு பணிசெய்தல்)
- உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

## சமத்துவ சேவை

வீடற்ற நிலமை, குற்றச்செயல் தொடர்பான சட்டப் பிரச்சினை, இனம், பண்பாடு, இனக்குழுமம், பால்பகுப்பு, மொழி ஆகிய காரணங்களால் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எங்கள் நிறுவனம் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

சீஆர்சீரீ கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக றொறன்ரோப் பகுதியில் சேவையாற்றும் இலாபநோக்கற்ற, சமூக உளநல அறக்கொடை முகவர் நிலையமாகும்.

நாங்கள் உளநல அமைப்பைப் பயன்படுத்தும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவியளிக்கிறோம். ஒன்ராறியோ சுகாதார-நெடு நாள் பராமரிப்பு அமைச்சு பிரதான நிதி உதவியை வழங்குகிறது. றொறன்ரோ பெரும்பாக யுனைட்டட் வே, கனடிய பாரம்பரிய அமைச்சு, றொறன்ரோ றொட்டரிக் கழகம், ஈஜேஎல்பி பவுண்டேசன், ஒன்ராறியோ ரிறில்லியம் பவுண்டேசன், றொறன்ரோ நகர சபை- சேவைபெறும் வழி, சமத்துவ நிதியளிப்பு ஆகியவற்றால் துணை உதவி நிதி வழங்கப்படுகிறது.

### அறக்கொடைப் பதிவு எண்:

#118871128 RR0001

நன்கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும் றொறன்ரோப் பகுதிக்கான எங்கள் உதவிகள், வளங்கள், உளநல சேவைகள் பற்றிய முழுமையான வழிகாட்டிக்கும் www.crct.org இணையத் தளத்தைப் பார்க்கவும்.

Community Resource Connections of Toronto

366 Adelaide Street East, Suite 230 | Toronto, ON M5A 3X9
தொ.பே: (416) 482-4103 | தொ.ந: (416) 482-5237 | crct@crct.org

Community Resource Connections of Toronto

# விடுதி அரவணைப்புச் சேவைத் திட்டம் (HOP)



## விடுதி அரவணைப்புச் சேவைத் திட்டம் என்றால் என்ன?

சீஆர்சீரீ ரொறன்ரோ பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் இலாபநோக்கற்ற சமூக உளநல முகவர் அமைப்பு ஆகும். இத்திட்டம் கணிசமான உளநல பிரச்சினைகள் உள்ளவர்களும் சமூகத்தில் சுயமாக இயங்குவதில் இன்னல்களை எதிர்நோக்கும் ரொறன்ரோவில் வாழும் வீடற்ற பெண்களுக்கான ஒரு சமூக உளநல செயல் திட்டமாகும்.

அதிகரித்துவரும் வீடற்றோரில் பெரும்பாலோர் உளநல பிரச்சினைகள் உள்ளவர்கள் என்னும் உணர்வு பொதுமக்களிடையே அதிகரித்ததின் காரணமாகவே இச்செயல் திட்டம் உருவாக்கப்பட்டது.

ஒன்ராறியோ சுகாதார அமைச்சிடமிருந்து நாங்கள் 1988 வசந்த காலத்தில் நிதியுதவி பெற்றுள்ளோம். ரொறன்ரோ சமூக வளத் தொடர்புகள் (சீஆர்சீரீ-CRCT) பெண்களின் செயற் திட்டங்களை இயக்கி வருகிறது. கோட்டா (COTA) உள-உடல் நல நிலையம் ஆண்களின் செயற் திட்டத்தை இயக்கி வருகிறது. கோட்டா உள-உடல் நல சேவையைப் பெற (416) 785-8797 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சீஆர்சீரீயில் ஒரு திட்ட முகாமையாளர், எட்டு விடுதி அரவணைப்புப் பணியாளர்கள், இரண்டு வீதி அரவணைப்புப் பணியாளர்கள் உள்ளனர். உளநலமும் நலத்துடன் வாழ்தலும், பெண்கள் பிரச்சினைகளும் ஆலோசனைகளும், நுகர்வோருக்காக வாதாடுதல் உட்படப் பலதுறைகளில் பயிற்சிகளைப் பெற்றதுடன் பல்வேறு பின்னணிகளைக் கொண்டவர்களாகவும் எங்கள் பணியாளர்கள் உள்ளனர்.

## சேவைத் தொடர்பைக் கோருதல்

தீவிரமான சமூக உதவி தொடர்ந்து நீண்ட காலத்திற்குத் தேவைப்படுபவராகவும் இருத்தல் வேண்டும். பெண்கள் காப்பக அமைப்பு, தரித்துச் செல்லும் (drop-in) மையங்கள், சேவை வழங்குநர் களிடமிருந்து நாங்கள் சேவைக்கான கோருதலைப் பெற்றுக்கொள்கிறோம்.

தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு விடுதி அரவணைப்புச் சேவைத் திட்ட முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும் (416) 482-4103.

## நாங்கள் எதனைச் செய்கிறோம்?

விடுதி அரவணைப்புச் சேவைத் திட்டம் நீண்டகால ஆதரவு தருதல், உரிமைகளுக்காக வாதாடுதல், மற்றும் சமூக சேவை இணைப்புக்களைச் செய்கின்றது. இச்சேவை முழுமையான நுகர்வோர் முகாமைத்துவ கண்காணிப்பு என வழமையாக அழைக்கப்படும்.

வீதி அரவணைப்புப் பணியாளர்கள் வீடற்றவர்களும் வெளியே உறங்குபவர்களுமான பெண்களுக்குச் சேவைகளை வழங்குவர்.

விடுதி அரவணைப்புப் பணியாளர்கள் அதே மாதிரியான சேவைகளைக் காப்பக அமைப்பு முறைகளில் உள்ளவர்களுக்கு வழங்குவர்.

### நாம் நம்பிக்கை கொள்கிறோம்...

- எல்லா மக்களும் தங்களது வருமானத்திற்கு ஏற்ற நிரந்தர வதிவிடம் வைத்துக்கொள்வதற்கு உரிமையுடையவர்கள்.
- எல்லா மக்களும் தேவையான வளங்களைப் பயன்படுத்த உரிமையுடையவர்கள்.
- வாடிக்கையாளர்களின் உணர்வுகள், பெறுமதிகள், தெரிவுகள் மிக முக்கியமானவை.

## பணியாளரின் பொறுப்புக்கள்

- விடுதிப் பணியாளர்களோடும் மற்றைய முகவர் நிலையங்களோடும் இணைப்பு நல்லுறவை ஏற்படுத்துதல்
- வாடிக்கையாளரோடு தொடர்பை ஏற்படுத்துதல்
- நெருக்கடிகளில் தலையிடுதல், வாழ்வதற்கான வழிமுறைகளில் உதவுதல்
- வாடிக்கையாளர்களின் தேவைகள், தெரிவுகளை மதிப்பிடுதல்
- வாடிக்கைளார்கள் தங்களது குறிக்கோள்களை அடைய உதவுவதற்குத் திட்டமிடுதல்
- வாடிக்கையாளர் அவர்களின் குறிக்கோள்களைத் தாமாக அடைவதற்கான திறன்களைக் கற்பித்தல்
- வாடிக்கையாளர்களை வளங்களோடு தொடர்புற வைத்தல், தடைகள் ஏற்படும்போது அவர்களுக்காக வாதாடுதல்
- தேவையான காலத்திற்கு இணைந்திருந்து கண்காணித்தல், ஆதரவு தருதல்
- எமது சேவைத் திட்டம், பங்களிப்பு பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ள விளக்கங்கள், ஆலோசனைகள் மூலம் தகவல்களைக் கொடுத்து உதவுதல், விடுதிகள் சேவைகள் வழங்குநர்களுடன் எமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்
- நடைமுறையில் உள்ள சேவைகளில் உள்ள இடைவெளிகளை இனங்கண்டு வளங்களை விருத்தி செய்தல், புதிதாக வளங்களை விருத்தி செய்யவும் திருத்தங்களை மேற்கொள்ளவும் வாதாடுதல்

## அந்தரங்கம் பேணல்

எங்கள் நிறுவனப் பணியாளர்கள், மாணவர்கள், தொண்டர்கள் அனைவரும் அந்தரங்கம் காக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றில் ஒப்பமிடும்படி வேண்டப்படுவர். உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பிரத்தியேகமாக வைத்திருப்பதோடு சட்டப்படி வேண்டப்பட்டாலன்றி உங்களுடைய சம்மதமின்றி அவற்றை எவருக்கும் வெளியிடமாட்டோம்.

எங்களின் அந்தரங்கம் காக்கும் கொள்கைகள் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள செயல் திட்ட அந்தரங்கம் காக்கும் பணியாளரை (416) 482-4103 இணைப்பு 232 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.